Judicial Form No.53

(See Rule 42)

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Cr.P.C)

**IN THE COURT OF I ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT, CUDDALORE**

**Sessions Case No. 44 Of 2020**

Deposition of ....... witness for .................. Prosecution........**P.W. 15**

Defence

Court

| | |
|---|---|
| Name | **கௌதமன்** |
| Father name | |
| Village | |
| Taluk | |
| Caste | |
| Calling | |
| Religion | **இந்து** |
| Age | |

Solemnly affirmed in accordance with the Provisions of the Oaths Act 1969 ( Central Act 44 of 1969) on **Thursday the 25th day of June 2026.**

(G.SARASWATHI) Signature of the witness.

NAME OF THE JUDGE :

Solemnly affirmed in accordance with the Provisions of the Oaths Act 1969 ( Central Act 44 of 1969) on **Thursday the 25th day of June 2026.**

**2 மற்றும் 3 எதிரிகள் ஆஜர் இல்லை. மனு தாக்கல் செய்து மனு அனுமதிக்கப்பட்டது. மற்ற எதிரிகள் ஆஜர்.**

**( சாட்சியை போலிசார் அடையாளம் காட்டினார்)**

**மனு அனுமதிக்கப்பட்டதன் பேரில் எதிரிகள் தரப்பு குறுக்குவிசாரணை:**

இறந்து போன வேல்முருகன் எனது மைத்துனர் என்றால் சரிதான். சம்பவம் நடந்த மறுநாள் என்னை போலிசார் விசாரித்தார்கள். என்னை அரசு மருத்துவமனையில் ஒருமுறையும், காவல் நிலையத்தில் ஒருமுறையும் விசாரித்தார்கள். அரசு மருத்துவமனையில் விசாரித்த போது எத்தனை மணி இருக்கும் என்று எனக்கு ஞாபகம் இல்லை. காவல் நிலையத்தில் எத்தனை மணிக்கு விசாரித்தார்கள் என்று ஞாபகம் இல்லை. கடலூர் அரசு மருத்துவமனையில் இருந்து முண்டியம்பாக்கம் மருத்துவமனைக்கு வேல்முருகனின் பிரேதத்தை கொண்டு சென்ற போது நானும் உடன் சென்றேன். பிரேதத்தை மாலை 6.00 மணிக்கு வீட்டிற்கு கொண்டு வந்தார்கள். எத்தனை மணிக்கு பிரேதம் அடக்கம் செய்யப்பட்டது என்று எனக்கு ஞாபகம் இல்லை. எந்த தேதியில் பிரேதம் அடக்கம் செய்யப்பட்டது என்று எனக்கு ஞாபகம் இல்லை. அடக்கம் செய்து முடிக்கும் வரை போலிசார் ஊருக்குள் வந்ததார்களா என்றால் இறுதி ஊர்வலத்தில் போலிசார் கலந்துக்கொண்டார்கள். இறுதி ஊர்வலம் பகலில் நடந்ததா அல்லது இரவில் நடந்ததா என்று எனக்கு ஞாபகம் இல்லை. போலிசார் விசாரணையில் வேல்முருகன் " சமீபத்தில் அதிகமாக குடித்து விட்டு உடம்பிற்கு முடியாமல் கிடந்தார்" என சொல்லியுள்ளேனா என்றால் சரிதான். போலிசார் சம்பவத்திற்கு மறுநாள் என்னை வீட்டில் விசாரித்ததாக வழக்கிற்காக பொய்யாக சொல்லுகிறேன் என்று சொன்னால் சரியல்ல.

போலிசார் விசாரணையில் இந்த வழக்கு சம்பவம் நடைபெறுவதற்கு ஒரு வாரத்திற்கு முன்பு ஒரு நாள் இரவு 9 அல்லது 10.00 மணிக்கு எங்கள் ஊரை சேர்ந்த சில இளைஞர்கள் உட்கார்ந்து இருந்ததாகவும் அவர்களை விசாரித்த போது அவர்கள்

எங்கள் ஊரை சேர்ந்த நவிநாத், பில்லா (எ) வேல்முருகன் (இறந்தவர்) மற்றும் ஒரு நபரை Sketch போட்டு கொலை செய்ய மேல்பாதிக்காரர்கள் திட்டம் போட்டு இருப்பதாக அவர்கள் சொன்னதாக நான் சொல்லவில்லை என்றால் சரியல்ல. நான் சொல்லியுள்ளேன்.

போலிசார் விசாரணையில் எதிரிகளான சுமன்ராஜ் மற்றும் ஜெயசந்திரன் ஆகியோர்களிடம் எதற்கு வீணான பிரச்சினை ஏன் இவ்வாறு எங்கள் ஊர்க்காரர்களை கொலை செய்யப்போவதாக கூறுகீறீர்கள் என கேட்டதாக நான் சொல்லவில்லை என்றால் சரியல்ல. நான் சொல்லியுள்ளேன்.

போலிசார் விசாரணையில் 31.12.2019 அன்று மாலை 5.00 மணிக்கு இறந்த போன பில்லா(எ) வேல்முருகனை பார்த்து நான் எச்சரிக்கை செய்து வெளியில் செல்ல வேண்டாம் வீட்டிலேயே இரு என்று கூறியதாக நான் சொல்லவில்லை என்றால் சரியல்ல. நான் சொல்லியுள்ளேன்.

வேல்முருகனை கொலை செய்ய திட்டம் தீட்டுவதாக நான் எந்த காவல் நிலையத்திலும் புகார் கொடுக்கவில்லை என்றால் சரிதான். வேல்முருகனுக்கு எந்த விதமான உயிர் மிரட்டலும் இல்லாத காரணத்தினால் தான் நான் காவல் நிலையத்தில் எந்த புகாரும் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் இருக்கும் இடம் அம்பேத்கர் நகர், நெல்லிக்குப்பம். ( சாட்சி அது தனக்கு சொந்த ஊர் என்றும் தற்போது அங்கே இல்லை என்றும் கூறினார்) இந்திரா நகர் என நெல்லிக்குப்பத்தில் எங்கள் ஊருக்கு கிழக்காக உள்ளது என்று சொன்னால் சரிதான். எங்கள் ஊருக்கு கிழக்கில் மேல்பாதி கிராமமும் அதற்கும் கிழக்கால் இந்திரா நகர் உள்ளது என்று சொன்னால் சரிதான். இந்திரா நகர் கிழக்கில் கீழ்பாதி உள்ளது என்றால் சரிதான். எனது ஊரான அம்பேத்கர் நகருக்கும் மேல்பாதிக்கும் இடையில் கிழக்கு மேற்காக PAH (president Abdul hameed Road) உள்ளது என்றால் சரிதான். அம்பேத்கர் நகரும், மேல்பாதியும் வெவ்வேறு ஊர் என்றால் சரிதான். இறந்த வேல்முருகனின் மைத்துனர் என்பதால் நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

வேல்முருகனின் மனைவி பெயர் சௌமியா என்றால் சரிதான். ( கற்றறிந்த வழக்கறிஞர் இறந்த வேல்முருகனின் மனைவி தற்போது வேறு நபரை திருமணம் செய்துக்கொண்டதாகவும் வேல்முருகனின் மனைவி வேல்முருகனின் குடிப்பழக்கத்தினால் வேறு திருமணம் செய்துக்கொண்டதாகவும் எனவே வேல்முருகனின் மனைவியும் அவர் திருமணம் செய்துக்கொண்ட நபரும் தான் வேல்முருகனை கொலை செய்ததாக கேட்டார். இந்த விவரங்கள் எதுவும் வேல்முருகனின் மனைவியான அ,சா, 13 சௌமியாவிடம் கேட்காமல் முதல் முறையாக சாட்சியிடம் கேட்டதால் இந்த கேள்விக்கான பதில் பதிவு செய்ய மறுக்கப்பட்டது). நான் வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

*Typed to my dictation in open Court, read over and interpreted to the Witness. Admitted and acknowledged by him/her to be Correct.*

*Sd/-G.Saraswathi*
*I Additional District Judge*
*Cuddalore.*